# பண்டைக்கால இந்திய வரலாற்றுவரைவியலை புதிய நோக்கில் கட்டியெழுப்புவதில் வரலாற்றாசிரியர் பேரா.ரோமிலா தாப்பர்

H.F.**பிர்தௌஸியா**[1], S. **அனுசூயா**[2]

[1]*சமூக விஞ்ஞானங்கள் துறை, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்*
[2]*சமூக விஞ்ஞானங்கள் துறை, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்*
firdawsiyafac@gmail.com

**ஆய்வச் சுருக்கம்**

வரலாற்று வரைவியல் என்பது ஏனையத் துறைகளைப் போலவே காலத்திற்குக் காலம் இற்றைப்படுத்தல்களுக்குள்ளாகி வளர்ந்துவரும் ஒரு துறையாகும். அதனடிப்படையில் வரலாற்றாய்வுகளும் மேம்படுத்தப்படும்போது குறித்த கடந்தகால நிகழ்வுகள் வரலாறுகளாக குற்றம் நீங்கி நிலைத்திருக்க இயலுமாகும். அல்லாதபோது அவை வழக்கொழிந்த கருத்துக்களாக மாறும். பண்டைக்கால இந்திய வரலாற்றில் அவ்வாறு நிலைப்பெற்றுள்ள கருத்துவார்ப்புக்களை புதியகோணத்தில் இருந்து நோக்கி ஆய்வு செய்தவராக பேரா.ரோமிலா தாப்பர் விளங்குகின்றார். அவரது ஆய்வுகளால் பெரும் விமர்சனங்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் ஆளாக நேர்ந்தபோதும் தனது ஆய்வு முயற்சிகளை இடைவிடாது தொடர்ந்து, பண்டைக்கால இந்திய வரலாற்று வரைவியலுக்கு புதிய திருப்பத்தை ஏற்படுத்திய ஓர் ஆளுமையாக தாப்பரை அறிமுகம் செய்வதையும் அவ்வாறு இந்திய வரலாற்று வரைவியலில் மீள் பரிசீலனை செய்ய வேண்டும் கருத்துவார்ப்புக்களை அடையாளம் காண்பதையும் நோக்காகக்கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பண்புசார் ஆய்வான இவ்வாய்வானது பேரா.ரோமிலா தாப்பரது நூல்கள் உட்பட ஆய்வுத் தலைப்பு சார்ந்த வேறு நூல்கள் மற்றும் அவர் பற்றிய விமர்சனக் கட்டுரைகளாகப் பத்திரிகைகளில் வெளியான கட்டுரைகள், இணையத்தள தகவல்கள் போன்ற இரண்டாந்தர மூலாதாரங்களைப் பயன்படுத்தி செய்யப்பட்டுள்ளது. பண்டைக்கால இந்திய வரலாற்றில் ஆதாரமற்ற வகையில் வேருன்றிப் போயுள்ள கருத்துவார்ப்புக்களை பல்வேறு அச்சுறுத்தல்கள், எதிர்ப்புக்களுக்கு மத்தியிலும் தனது வரலாற்றியல் ஆய்வுகளாலும் கருத்துக்களாலும் புதிய நோக்கில் இந்திய வரலாற்றை முன்வைத்த ஆளுமையாக பேரா.ரோமிலா தாப்பர் விளங்குகின்றார்.

**திறவுச்சொற்கள்:** ரோமிலா தாப்பர், இந்திய வரலாறு, வரலாற்று வரைவியல், பண்டைய இந்தியா, புதிய நோக்கு

**அறிமுகம்**

**பேரா.ரோமிலா தாப்பர்**

அண்மைக்கால இந்திய வரலாற்று வரைவியலை நோக்கும் போது முன்னணி வரலாற்றாசிரியராகவும் முன்னோடியாகவும், இந்திய வரலாறு பற்றிய சர்ச்சைக்குரிய கருத்துக்களை முன்வைத்துவருபவராக பேராசிரியை ரோமிலா தாப்பர் விளங்குகின்றார். பன்னெடுங்காலமாக முன்வைக்கப்பட்டு வந்த இந்திய வரலாற்றின் வரம்பெல்லைகளை சவாலுக்குள்ளாக்கி அத்தொடர் சங்கிலியை அறுத்து புராதன இந்திய வரலாறு தொடர்பாக முற்போக்கான தனது புதிய நோக்கிலான வரலாற்றாய்வுகளை முன்வைத்துள்ளார். எனவே புதிய ஆய்வுநோக்கு நிலையிலில் இருந்து ஆய்வு செய்யப்பட்டுள்ள இவரது ஆய்வு முயற்சிகளினால் புராதன இந்திய வரலாறானது பல கேள்விகளுக்கள்ளாகியுள்ளது. பல வரலாற்றுக் காலப்பகுதிகள் மீள்கட்டமைக்கப்பட வேண்டியத் தேவையை தெளிவுறுத்தியுள்ளது. அதேசமயம் அவர் தொடர்பான பல விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டவண்ணம் உள்ளன.

இவ்வாறான பின்னணியில் இருந்து ஒரு வரலாற்றாசிரியையாக ரோமிலா தாப்பர் பற்றிய அறிமுகத்துடன் இந்திய வரலாற்று வரைவியலுக்கான அவரது பங்களிப்பை நோக்குவது பொருத்தமாகும். 1931.நவம்பர்.30இல் பிறந்த இவர், 1958இல் லண்டன் பல்கலைக்கழகத்தில் இந்திய வரலாற்றுத் துறையில் தனது கலாநிதி பட்டப்படிப்பை பூர்த்தி செய்துகொண்டார் (Thapar,2002). தற்போது ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் ஓய்வுநிலைப் பேராசிரியையாகக் கடமையாற்றுவதுடன் கொர்னல் பல்கலைக்கழகம், பென்சில்வேனியப் பல்கலைக்கழகம் மற்றும் பரிஸில் கொலேஜ் டி பிரான்ஸிலும் வருகைதரு விரிவுரையாளராகக் கடமையாற்றுகின்றார்.

புராதன இந்திய வரலாற்றில் தேர்ச்சியுடைய இவர் புராதன இந்திய வரலாற்று வரைவியலை புதிய கண்ணோட்டத்தில் முன்வைப்பதில் பெரும் பங்குகொண்டுள்ளார். அவ்வாறான அவரது படைப்புக்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். Asoka and the Decline of the Mauryas, Ancient Indian Social History: Some Interpretations, Recent Perspectives of Early Indian History (Editor), A History of India-Volume I, Early India: From the Origins to AD 1300. இவர் புராதன இந்தியாவின் சமூக, கலாசார நிலை தொடர்பாக அதிகமான ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார்.

இவைதவிர இவர் உலகளவில் ஏற்கப்பட்ட ஒரு புத்திஜீவியாக திகழ்வதுடன் இன்னோரன்ன பதவிகளையும் கௌரவப் பட்டங்களையும் உலகலாவிய ரீதியில் பெற்றுள்ளார். 1983இல் Indian History Congress இல் தலைவராகவும் 1999இல் British Academy இன் இணைப்பாளராகவும் சேவையாற்றியுள்ளார் (Thapar,2002). American Philosophical Societyஇல் உறுப்பினராக, 2019இல் தேர்வுசெய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும். அத்தோடு ஒக்ஸ்போர்ட் லேடி மார்கரட் ஹோல், ஸ்கூல் ஒப் ஓரியன்டல் அன்ட ஆப்ரிகன் ஸ்டடீஸ் (SOAS), லண்டன் பல்கலைக்கழகம்

என்பவற்றில் கௌரவ உறுப்பினராகவும் அங்கம் வகிக்கின்றார். சிக்காகோ பல்கலைக்கழகம் மற்றும் பரிஸின் 'இன்ஸ்டிடியுட் நெஷனல் டாஸ் சிவிலைசேஷன்ஸ் ஓரியன்டல்ஸ்', ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் மற்றும் எடிக்பர்க் பல்கலைக்கழகம் என்பவற்றில் கௌரவ கலாநிதிப் பட்டங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார். அவ்வாறே 2009இல் அமெரிகன் எக்கடமி ஒப் ஆர்ட்ஸ் என்ட் சயன்ஸ் நிறுவனத்தில் 2009இல் வெளிநாட்டு கௌரவ உறுப்பினராகவும் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார். மேலும் 2017இல் ஒக்ஸ்போர்ட் புனித அந்தோனி கல்லூரியின் கௌரவ உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவரது பணிக்காக இந்திய அரசு 1992 மற்றும் 2005இலும் அரசின் உயர் விருதான பத்மபூஷன் விருதை வழங்க முனைந்தும் அவர் அதனை மறுத்துவிட்டமை குறிப்பிடத்தக்கவிடயமாகும். 2005இல் அப்போதைய ஜனாதிபதி APJ அப்துல் கலாமிற்கு பின்வருமாறு மறுப்புரை வழங்கியிருந்தார். 'நான் கல்விசார் நிறுவனங்கள் மற்றும் எனது தொழிற்துறையுடன் இயைந்தவைகளுடாகக் கிடைக்கப்பெறும் விருதுகளை மட்டுமே ஏற்பேன். அரச விருதுகளை ஏற்கமாட்டேன்.' (https://www.business-standard.com/about/who-is-romila-thapar). இவ்வாறாகத் தன்னை அரசியல் சார்ந்த தலையீடுகள் ஏற்படாதவாறு இடைவெளிகளையும் பேணிக்கொண்டார்.

**ஆய்வின் நோக்கம்**

இவ்வாய்வானது இந்திய வரலாற்று வரைவியலை புதிய கோணத்திலிருந்து நோக்கும் ஓர் ஆளுமையாக பேரா.ரோமிலா தாப்பரை அறிமுகம் செய்வதையும் அவர் நோக்கில் புராதன இந்திய வரலாற்றில் மீள்பரிசீலனை செய்யவேண்டியதாகக் கருதப்படும் கருத்துவார்ப்புக்களை அடையாளம் காண்பதையும் பிரதானமாகக்கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வு முறையியல்**

பேரா.ரோமிலா தாப்பர் தொடர்பான விமர்சனங்கள் கட்டுரைகளாக பத்திரிகைகளில் வெளிவந்துள்ளது. அவற்றைப் பிரதானமாகக்கொண்டு பண்புசார் ஆய்வாக பேரா.ரோமிலா தாப்பரது நூல்கள் உட்பட ஆய்வுத் தலைப்பு சார்ந்த இணையத்தள தகவல்கள் போன்ற இரண்டாந்தர மூலாதாரங்களைப் பயன்படுத்தி இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**இலக்கிய மீளாய்வு**

பேரா.ரோமிலா தாப்பர் தொடர்பான தனியான ஆய்வு நூல்களை அறியமுடியவில்லை. இருப்பினும் அவரது ஆய்வு முயற்சிகளை விமர்சனக் கண்கொண்டு நோக்கி எழுதப்பட்ட பத்திரிகை கட்டுரைகள் இணையத்தளத்திலிருந்து இவ்வாய்விற்காக பெறப்பட்டது. அவ்வகையில் அவை இவ்வாய்விற்கு எவ்வகையில் பயனுடையதாக இருந்தது

என்பதையும் இவ்வாய்வுத் தலைப்பு அவற்றிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது என்பதையும் பின்வருமாறு குறிப்பிடலாம்.

'The Changing Art of Writing History' எனும் தலைப்பில் ஷெய்க் முஜிபுர் ரஹ்மான் The Hindu பத்திரிகைக்கு எழுதிய கட்டுரை இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இக்கட்டுரையானது Readings in Early Indian History எனும் தாப்பரது நூலை மையமாக வைத்து அந்நூலின் முக்கியத்துவத்தையும் இந்திய வரலாற்றை தாப்பர் இந்நூலில் எவ்வாறு புதிய கண்ணோட்டத்தில் ஆராய்கிறார் என்பதையுட் அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளது. எனவே இக்கட்டுரை இவ்வாய்வுத் தலைப்புடன் நோரடியாகவே தொடர்புறுகின்றது. என்றாலும் அவரது ஒரு நூலை மட்டுமே அடிப்படையாகக்கொண்டு எழுதப்பட்டுள்ளமையால் ஆய்வு இடைவெளியிருக்கக் காணலாம்.

'Romila Thapar' எனும் தலைப்பில் ரவி என்பவரால் The Indian Authors எனும் இணையத்தளப் பக்கத்திற்கு எழுதப்பட்ட கட்டுரையும் இங்கு குறிப்பிடப்பட வேண்டியுள்ளது. இக்கட்டுரை ரோமிலா தாப்பரது வரலாற்று அணுகுமுறைகள் எதிர்மறையான விமர்சனங்களை முன்வைப்பதாகவும் மொகலாயரது ஆட்சிக்கு சார்பான போக்குடைய ஒருதலைப்பட்சமான கருத்துக்களை அவர் கொண்டிருப்பதாகவும் முன்வைக்கப்பட்டுள்ளது.

Romila Thapar in Conversation எனும் தலைப்பில் Economic and Political weekly பத்திரிகையில் வெளியிடப்பட்ட கட்டுரையும் இவ்வாய்வுத் தேவைக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இக்கட்டுரையானது மூன்று மாணவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் தொடர்பாக அவரது கண்ணோட்டத்தை எடுத்துரைப்பதாக அமையப்பெற்றுள்ளது.

இவ்வாறாக மேற்கட்ட கட்டுரைகளிலிருந்து இவ்வாய்வுத் தலைப்பானது வேறுபட்டுள்ளதுடன் இவற்றுள் உள்ள ஆய்விடைவெளியான வரலாற்றாசிரியர் என்றவகையில் பேரா.ரோமிலா தாப்பர் புராதன இந்திய வரலாற்றுவரைவியலை எவ்வாறு புதிய கண்கொண்டு நோக்குகிறார் என்பதை அடிப்படையாகக்கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**இந்திய வரலாற்று வரைவியல் பற்றிய அறிமுகம்**

இந்திய வரலாறானது கலாசார மரபுகளால் பழைமையானதும் மிக நீண்ட கால எல்லையையும் கொண்டதாகும். ஆகவே, அதன் நீண்ட கால வரலாற்று ரீதியிலான இருப்பானது குறிப்பாக அதன் புராதன கால வரலாற்றைக் கட்டியெழுப்புவதில் காலத்துக்குக் காலம் இன்னோரன்ன சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளது. இந்திய வரலாற்றின் ஆரம்பம் மற்றும் கட்டமைவு என்பன பற்றி நோக்கும்போது, பிரித்தானிய கம்பனியின் ஆதரவில் மாக்ஸ் முல்லர் தொடர்ந்து பல பிரித்தானிய அறிஞர்கள் இந்திய இலக்கியங்களைக் கற்றறிந்து இந்திய நாகரிகக் கூறுகளை அடையாளம்காண வருகை தந்தனர். இது தொடர்பாக டி.ஞானய்யா கூறும்போது (2014), இந்தியாவில் கல்விகற்ற

ஒரே வர்க்கமாக இருந்த பிராமணரின் உதவியுடன் இந்திய வரலாற்றை தேடலாயினர். மீதமுள்ள 85 வீத மக்களும் கல்வியுரிமை மறுக்கப்பட்டிருந்தது. பிராமணர்களது மொழி சமஸ்கிருதம் என்பதுடன் அப்படைப்புக்கள் யாவும் பிராமணரை அடிப்படையாகக் கொண்டதாகவே விளங்கியது. இவையே இந்திய வரலாற்றை எழுத மூல ஆதாரங்களாக்கப்பட்டன. இதனால் மீதமுள்ள 85 வீத மக்களது கலாசாரமும் வாழ்வியலும் மறுக்கப்பட்டன. இம்மக்கள் தொடர்பான வரலாற்றை அவ்வறிஞர்களும் அறிய முயலவில்லை என்பதுடன் பிராமணர் அதற்கான ஆய்வுகளுக்கு இடமளிக்கவுமில்லை. ஆகவே இந்திய வரலாறு ஒரு தலைப்பட்சமாக எழுதப்பட்டுள்ளதாக ஞானய்யா தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

முன்னைய வரலாற்றாசிரியர்கள் வரலாறு எழுதியதற்கும், இன்று எழுதப்படும் வரலாற்றுக்கும் இடையே வேறுபாடுகள் உண்டு. சில தசாப்தங்களாக வரலாற்றியல் ஆய்வு முறைகள் மாற்றமுற்றுள்ளன. அவ்வகையில் வரலாற்றியலில் துல்லியமாகவும் பல்வேறு பகுப்பு முறைகளின் அடிப்படையிலானதுமான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விஞ்ஞானத்தொழினுட்ப வளர்ச்சி போன்ற அடிப்படைக் காரணிகளினால் பல புதிய சான்றுகளை வரலாற்றாய்வில் உள்நுழைக்கவும் பல புதிய உறுதிப்படுத்தக்கூடிய விளக்கங்களைப் பெறவும் முடிவதுடன், பழைமையை மெய்யியல் நோக்கிலிருந்து பார்க்கவும், புதிய விளக்கங்களை முன்வைக்கவும் வரலாற்றாசிரியர்களால் முடிந்துள்ளது (Thapar,2002). இவற்றினால் வரலாற்றாசிரியன் முன்னர் எழுதப்பட்ட வரலாறுகள் தொடர்பாக சுய உணர்வுடன் சிந்திக்கவும் கட்டியெழுப்பப்படும் வரலாறுகளை புதியகோணங்களில் இருந்து நாடவும் ஆரம்பித்துள்ளான். எனவே பயன்படுத்தப்படும் சான்றுகளின் தன்மை உட்பட கடந்த கால வரலாற்று நூல்கள், அரசியல், சமுதாயத் துறைகள் உண்டாக்கும் விளைவுகள் பற்றியும் வரலாற்றாசிரியர்கள் மீள்சிந்தனை செய்கின்றனர். சர்வதேச அறிவுலகில் வரலாற்றியலில் ஏற்பட்டுள்ள புதியதும் முற்போக்கானதும் பொருத்தமானதுமான மாற்றங்களுக்கு ஏற்ப இந்திய வரலாற்று வரைவியலும் மீள்நோக்கப்பட வேண்டும் என்பதாக தாப்பர் கருதுகின்றார். இதனை வரலாறும் வக்கிரங்களும் எனும் நூலில்,

> ‘‘தற்கால வரலாற்று நூல்கள் கடந்த இரண்டு நூற்றாண்டுகளில்தான் தோன்றியுள்ளன. இக்காலத்தின் தேவைகள் சில கருத்தோட்டங்களையும் கொள்கைகளையும் ஆதரித்தன. இவை இப்பொழுது பொருத்தமற்றவையாகிவிட்டன... நமது பண்பாட்டையும், வரலாற்றையும் விமர்சன ரீதியாக ஆராய்வதற்குரிய *சுயநம்*பிக்கை நமக்கு ஏற்படவேண்டும்.’’ (2008,பக்.8)

என்பதாக விளக்குகின்றார்.

**ரோமிலா தாப்பர் பற்றிய விமர்சனங்கள்**

இந்திய வரலாற்றை பொருத்தமான விஞ்ஞான அணுகுமுறைகளின் அடிப்படையில் நோக்கியவராக தாப்பர் விளங்குகின்றார். அவ்வாறே இந்திய வரலாற்றை இந்தியாவுடன்

மட்டுப்பட்ட வரலாறாக மட்டுமன்றி அதனை வரலாற்றின் பின்னணியில் ஒரு பிராந்திய வரலாறாகவும் முன்வைப்பதில் வெற்றியடைந்துள்ளார். மேலும் இந்திய வரலாற்றில் உள்ள தவறான வார்ப்புக்களாக தான் கண்டவற்றை ஆய்வுகளின் அடிப்படையில் மீள்வாசிப்புக்குட்படுத்துவதில் தாப்பர் ஆர்வம் காட்டிவருபவராவார். அவ்வாறான அவரது முன்னோடி கருத்துக்களினால் இந்திய சமூகத்தில் பல்வேறு தரப்பினரதும் கடும் எதிர்ப்பிற்கு ஆளானார். அவரை ஒர் இந்துத்துவ விரோதி எனவும் இடதுசாரியாகவும் விமர்சனம் செய்தனர். எடுத்தக்காட்டாக, 'கருத்தியலும் வரலாறும்' எனும் நூலில் மார்க்ஸிஸ்ட் வரலாற்றாய்வாரள்களது பெயர்பட்டியலில் தாப்பரது பெயரும் முன்வைக்கப்பட்டுள்ளமையைக் கூறலாம் (2006,பக்.91). இவர் வலதுசாரிகளால் பெருமளவில் எதிர்ப்பிற்குள்ளாக்கப்படவும் வெறுக்கப்படவும் இன்னோரன்ன காரணங்களை முன்வைக்கலாம்.

ரோமிலா தாப்பரை பரவலாக வெறுக்கும் வலதுசாரிகள் உட்பட்டோரது வெறுப்புக்கு பல காரணிகள் உள்ளன. அவ்வனைத்து காரணிகளும் இந்தியாவின் புராதன வரலாற்றை ரோமிலா தாப்பர் புதிய கண்ணோட்டத்தில் முன்வைத்த ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டதாகும். அவற்றை பின்வருமாறு முன்வைக்கலாம். இந்துமதம், இந்துத்துவம் என்பவற்றை இருவேறாக வரையறுத்தார். அதன்படி இந்துமதம் என்பது ஒரு சமயமாகவும் வாழ்க்கைநெறியாகவும் அடையாளப்படுத்தினார். அத்தோடு இந்துத்துவத்தை இந்து பெரும்பான்மையினது அரசியலாக முத்திரையிட்டார்.

அத்தோடு இன்றைய பல வரலாற்றாசிரியர்கள் போல தாப்பரும் இந்திய வரலாற்றினை காலப்பகுப்பு செய்யப்பட்டுள்ள விதம் தொடர்பாக கடுமையான விமர்சனத்தை முன்வைப்பவராக உள்ளார். அதாவது, இந்திய வரலாற்று கால எல்லைகளை இந்து, இஸ்லாமிய மற்றும் பிரித்தானிய காலப்பகுதிகளாக வகைப்படுத்துவது பொருத்தமற்றது என்பதில் உறுதியாக உள்ளார். இந்த வரலாற்றுக்கட்ட பகுப்பு முறை ஆய்வுத்தேவைக்கு வசதியாக இருந்தாலும் இனம் சார்ந்த ஒரு பகுப்புமுறையாக அமைவதுடன் அது தற்காலத்தில் வாழும் மக்களது வாழ்வைப் பாதிப்பதாகவும் உள்ளதை தாப்பர் எடுத்துக்காட்டுகிறார். அதாவது இந்திய வரலாற்றை பழங்காலம், இடைக்காலம் எனப் பிரிப்பதைப்போல இந்து-முஸ்லிம் ஆட்சிக் காலப்பகுதிகளாக அடையாளம் காண முற்படும்போது, இடைக்காலத்தில் டில்லி முஸ்லிம்களது ஆட்சிக்குட்பட்டதும் இந்தியாவில் மாபெரும் மாற்றம் நிகழ்ந்துவிட்டதாக உணர வைக்கின்றது. உண்மையாக இந்திய வரலாற்றை தொகுப்பாக எடுத்துநோக்கும் போது கி.பி.10ஆம் நூற்றாண்டு முதல் 16ஆம் நூற்றாண்டு வரையில் மாபெரும் மாற்றம் ஏதும் நிகழ்ந்துவிடவில்லை (சண்முகலிங்கம்,2006) என தாப்பர் கருதுகின்றார். அத்தோடு இந்தியாவில் ஒரே சமுதாயத்தில் எல்லா இடத்திலும் சமுதாய மாறுதல் என்பது ஒரே அளவில் நடைபெறவுமில்லை. ஆகவே வெறுமனே அரசியல் ஆட்சி மாற்றங்க;டாக இன ரீதியாக வரலாற்றுக் காலப்பகுப்பை மேற்கொண்டு சமூக, பொருளாதார நிலைமைகளை அடையாளம் காண்பதைவிட அடிப்படையான சமூக, பொருளாதார மாறுதல்களின்

அடிப்படையில் செய்யப்படும் பகுப்பு முறையே உகந்தது என்பதையே தாப்பர் முன்வைக்கின்றார்.

மூன்றாவது காரணியாக, இந்துக்களது தோற்றத்தை ஆரியர் மற்றும் சிந்துவெளி நாகரிகத்துடன் இணைத்து முன்வைக்கும் கருத்தியலுடன் உடன்பட மறுத்தார். சிந்துவெளி நாகரிகத்தை 'சரஸ்வதி சமவெளி நாகரிகம்' என பெயர் மாற்ற எடுக்கப்பட்ட அரசியல் ரீதியான முயற்சியை எதிர்த்தார். இந்து மதம் எனும் அடையாளப்படுத்தலுக்குள் ஏனைய அனைத்து மக்களையும் உள்ளடக்கி அவர்களது தனித்துவத்தை இழக்கச்செய்வதாகவும் இந்திய உபகண்டத்தில் ஆரம்பம் முதல் ஆரியரது ஏக பண்பாடே நிலவியதாக நிறுவ முயல்வதாக நோக்கினார். அதேபோல அவர் வன்முறைகள், அழிவுகள், கொடூரங்கள் என்பவற்றிற்கு இந்தியாவிற்கு பிற்காலத்தில் வந்த ஏனைய இனக்குழுக்கள் மட்டும் காரணமாகிவிட முடியாது என்றார். இவரது இக்கருத்து பெரும்பான்மை இந்துக்களுக்கு எதிரானதாகவும் ஒரு பக்கச்சார்பானதாகவும் பார்க்கப்பட்டது. 2014இல் அவர் வெளியிட்ட 'The Past as Present: Forging Contemporary Identities Through History' எனும் தனது நூலில் நிகழ்காலத்திற்கு ஏற்றவாறெல்லாம் வரலாற்றை மாற்றியமைக்க முடியாது என்பதை ஆணித்தரமாக முன்வைத்தார். அந்நூலில் அவர், நிகழ்கால விடயங்களை சட்டபூர்வமுடையதாக்க கடந்த கால நிகழ்வுகள் மீட்டப்படுமாயின், நிச்சயமாக அக்கடந்த காலத்தின் உண்மைத்தன்மை தொடர்ந்து மீள ஆராயப்படுதல் வேண்டும் என்றார்.

இவரது இவ்வாறான முற்போக்கான கருத்துக்கள், வெளிப்படையான மறுப்பரைகள் காரணமாக அவருக்கு எதிரான வெறுப்புணர்வும் எதிர்ப்பலைகளும் சமூக ஊடகங்களில் வியாபிக்கலானது. இதனால் மக்களின் எதிரியாக இவர் சித்தரிக்கப்பட்டார். 2003இல் Library of Congress Kluge Chair இற்கு இவர் நியமிக்கப்பட்டார் எனினும் நிகழ்நிலை மனு தாக்கல் செய்யப்பட்டு 2000இற்கும் மேற்பட்ட கையொப்பங்களால் இந்த நியமனம் எதிர்க்கப்பட்டது(https://theprint.in/opinion/why-right-wingers-and-lapsed-liberals-hate-romila-thapar-the-mother-of-history-in-india/237900/).அதில் தாபர் ஒரு மார்க்சியவாதி எனவும் இந்து விரோதி எனவும் சாடப்பட்டதுடன், அவர் இந்தியாவிற்கென ஒரு வரலாறு இருந்ததை முற்றாக மறுப்பதாகவும் அவரும் அவரைச் சார்ந்தோரும் இந்து நாகரிகத்தை பண்பாட்டுப் படுகொலைகளாலான போராக அடையாளப்படுத்துவதாகவும் குற்றம் சாட்டினர்.

இந்திய பாடசாலைகளது வரலாற்றுப் பாடநூல்களை ஆய்வு செய்ததில் அவற்றில் முன்வைக்கப்பட்டுள்ள காலாவதியாகிப் போன கருத்துக்கள் மற்றும் பொதுவாக நிலவும் காலனித்துவவாத கருத்துக்கள் குறித்து தான் திகைப்புற்றதாக (2009) சஞ்சிகை ஒன்றிற்கான கட்டுரையில் தாபர் குறிப்பிட்டுள்ளார் https://blogs.loc.gov/kluge/2015/03/who-writes-history/.

இந்த மனு எத்தகைய தாக்கத்தையும் செய்ய சக்தியற்றிருந்தாலும் அப்போதைய அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட பாடநூல்களது மீளாய்வில் தாபரது கருத்துக்கள் அந்நூல்களில் இருந்து நீக்கப்பட்டன. அவற்றுள் தரம் ஆறு, புராதன இந்திய வரலாறு பாடப்புத்தகத்தில் அவரால் முன்வைக்கப்பட்டிருந்த மக்கள் மாட்டிறைச்சி சாப்பிட்டமை மற்றும் புராதன இந்தியாவில் சாதிக்கட்டமைப்பின் உருவாக்கம் என்பன தொடர்பான அவரது கருத்துக்கள் அவரது அனுமதியின்றியே நீக்கப்பட்டன. இதற்கு தாபரது பதிலுரை பின்வருமாறு அமைந்திருந்தது, இந்த மோதலானது இடதுசாரி மற்றும் வலதுசாரி வரலாற்றாசிரியர்களுக்கிடையிலானதல்ல. மாறாக, தொழில்முறைசார்ந்த வரலாற்றாசிரியர்களுக்கும் இந்துத்துவ தூண்டுதலின்பால் அனுதாபம் கொண்டுள்ள அரசியல்வாதிகளுக்கும் இடையிலானதாக விமர்சித்தார்.

1947இல் இந்திய காலனித்துவ ஆட்சியிலிருந்து சுதந்திரமுற்றதுடன் பாகிஸ்தான் உடனான அரசியல் மோதலுக்கு மத்தியில், அது தனக்கான தேசிய அடையாளம் நோக்கி பயணிக்கும் இளம் நாடாக விளங்கியது. அரசியல் ரீதியாக ஒருங்கிணைந்திருந்த ஒன்றிய இந்தியாவானது தனது மரபுரிமைகளையும் வரலாற்று அடையாளங்களையும் ஆவணப்படுத்தி மக்கள்மயப்படுத்தும் முயற்சியில் இறங்கியிருந்தது. இவ்வேளையில், புதிய இந்திய அடையாளத்தை இனம்காணும் புதிய தலைமுறைக்கான வரலாற்றாசிரியருள் ஒருவராக இருந்த ரோமிலா தாப்பர் பாடசாலைக்கான புராதன மற்றும் இடைக்கால இந்திய வரலாற்று புத்தகங்கள் இரண்டை எழுதும் பொறுப்பை ஏற்றிருந்தார். அந்நூல்களுள் காலனித்துவக் காலத்தில் புராதன இந்திய வரலாற்றை சிதைவுறும் வகையில் கட்டியெழுப்பப்பட்டிருந்த வரலாறுகளையும் புனிதமாகப் பார்க்கப்பட்ட புராணக் கதைகளையும் தொடர்ந்து நிலைத்திருக்கச் செய்வதில் அவர் உடன்படவில்லை. இவரால் எழுதப்பட்ட பாடசாலை பாடநூல்களை பாடத்திட்டத்திலிருந்து நீக்குமாறு 1970களில் சிலர் குரலெழுப்பலாயினர். பிற்பட்ட 1990களிலும் இவரை இந்து மற்றும் இந்திய விரோதியாக சித்தரித்து எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதுடன் (https://blogs.loc.gov/kluge/2015/03/who-writes-history/) மரண அச்சுருத்தலும் வழங்கப்பட்டிரந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும். எனினும் வரலாற்றை சான்றுகளின் அடிப்படையில் மட்டும் முன்வைக்க வேண்டும் எனும் தாபரது ஆய்வுப் போராட்டத்தை முடக்க முடியவில்லை.

தனது அடையாளங்களான இனம், மதம், மொழி சார்ந்த மக்களிடமிருந்தே தனக்கான எதிர்ப்பு வந்ததோடு மட்டுமன்றி மரண அச்சுருத்தல் வழங்கப்பட்டவேளைகளிலும் தனது ஆய்வுத் தேடலை இடைவிடாது தொடர்ந்த ஆய்வாளராகவும் தனது கருத்தில் பின்வாங்காது ஆய்வுப் பெறுபேற்றை சமூகமயப்படுத்த பாடுபடுபவராகவும் தாப்பர் தற்கால இந்திய வரலாற்றாசிரியர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்கின்றார்.

## ரோமிலா தாப்பர் பார்வையில் இந்திய வரலாற்றுக் கட்டமைவும் அவை வேண்டி நிற்கும் மாற்றமும்

வரலாறானது மனித அடையாள சிந்தனைகளுடன் நெருங்கிய தொடர்புடைய ஒரு சமூக விஞ்ஞானத் துறையாகும். ஆகவே, உலகளாவிய ரீதியில் வரலாறுகள் நடைமுறை அரசியல் தரப்பினாலும் மேலாதிக்க வகுப்பினராலும் இன்னும் உள்ள சமூக அழுத்தக் குழுக்களினாலும் தேவைக்கேற்ப கையகப்படுத்தப்படுவதும் அவர்களது கருத்துச் செல்வாக்கிற்குட்படுவதும் குறிப்பாக கீழைத்தேய உலகில் சர்வசாதாரணமாக காணமுடிகின்றது (Thapar,2002). இந்திய வரலாற்றுக் கட்டமைவிலும் இக்குறைப்பாடிருப்பதை தாப்பர் தன் ஆய்வுகளில் கவனத்திற்கொண்டுள்ளார். இதனை நா.வானமாமலையினால் தமிழாக்கம் செய்யப்பட்ட 'வரலாறும் வக்கிரங்களும்' எனும் நூலில் பின்வருமாறு குறிப்பிடக் காணலாம். (2008,பக்.7)

> ''வரலாற்று ஆசிரியன் பழங்காலத்தைப் பற்றி அக்கறை கொண்டுள்ளவனாயினும், அவன் ஆராய்கிற சமூகத்தின் வருங்காலத்தில் ஒரு முக்கியப் பாத்திரமுடையவனாக இருக்கிறான் என்பது ஒரு விநோதமான முரண்பாடாக இருக்கிறது. வரலாற்று முற்காட்சியோடு ஒரு சமுதாயத்தின் தோற்றத்தையும், படிமுறை வளர்ச்சியையும், அறிய முயலுவது வரலாற்று ஆசிரியனது ஆர்வம். சமதாயம் என்ற சொல் மக்களது வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் உள்ளடக்கியதாகும். தனது ஆராய்ச்சியின் விளைவாக வரலாற்று ஆசிரியன் ஒரு சமுதாயத்தின் கருத்துப் படிமத்தை உருவாக்கினான். பழங்காலச் சான்றுகளைக் கையாளும்பொழுது தற்கால நிலைகளால் அவன் பாதிக்கப்படுகிறான். வரலாற்றின் பொருளைக் காண்பதில் இருவித மனச்செயல் முறைகள் இருக்கின்றன. தற்காலத் தேவைகளை கடந்த காலத்தில் காண முயலுவதும், பழங்காலத்தின் படிமத்தைத் தற்காலத்தின் மீது பதிக்க முயலுவதும் அவ்விரு செயல் முறைகளாகும். பழங்காலத்தின் படிமம் வரலாற்றாசிரியன் வருங்காலத்திற்கு அளிக்கும் நன்கொடையாகும். இப்படிமத்தைத் தற்காலத்தார் அரசியல் புனைக்கதைகளை உருவாக்கப் பயன்படுத்துகிறார்கள். இத்தகைய அரசியல் மேல்கோப்புகளுக்கு வரலாற்று ஆசிரியர்கள், சமூக ஆய்வாளர்களது கொள்கைகளிலிருந்து அறிவியல் ஆதாரங்கள் பெறப்படுகின்றன.'

இவற்றிற்கு உதாரணங்களை முன்வைக்கும்போது, தற்காலத்தை பழமையின் மீது பதித்த செயல்களாக இந்திய வரலாற்றில் இந்து-முஸ்லிம் முரன்பாட்டை முன்வைக்கிறார். அதாவது இந்துக்களும் முஸ்லிம்களும் இருவேறு நாட்டினர் என்ற கொள்ளை பாகிஸ்தான் என்றொரு நாட்டை உருவாக்கும் அளவில் வேரூன்றியிருந்தது. ஒரு பரம்பரைக் காலம் முழுதுமாக திரிபுற்ற இவ்வாறான படிமங்களால் உணர்வூட்டப்பட்டு தற்கால அதிகார நாட்டங்கள் அடையப்பட்டன. ஆயினும் புதிய

நாடாக பங்களாதேஷ் உருவான நிகழ்வுகளால் இந்த கொள்கை இன்று உடைத்தெரியப்பட்டுள்ளதாக எடுத்துரைக்கிறார்.

அதுபோலவே, பண்பாடு என்பதும் கடந்த காலத்துடன் வேர் கொண்டுள்ளதுடன் அதுவும் மனித அடையாளங்களுடன் நெருங்கிய தொடர்புடையதாக உள்ளது. எனவே, வரலாறு மற்றும் பண்பாடு இரண்டுக்குமிடையில் பெரும் தொடர்பு நிலைப்பெற்றிப்பதைக் காணலாம். பக்கச்சார்பானவையும் மேலாதிக்க சிந்தையுடைய குழுக்களது அபிலாஷைகளை நிறைவேற்றிக்கொள்ளவும் நிகழ்கால தேவைக்கேட்ப கடந்த கால நிகழ்வுகளாகக் கூறிக்கொள்ளப்படுபவை வரலாறுகளாகக் கட்டமைக்கப்படுகின்றன (Thapar,2002). அவ்வாறே அவை 'பண்பாடு' எனும் கட்டமைப்பினுள் வைத்தும் விளக்கப்படுகின்றது. ஆயினும் இங்கு கவனிக்க வேண்டிய விடயம் யாதெனில், இந்த விம்பமானது அரசிடமிருந்தன்றி குடிமக்களிடமிருந்து உருப்பெற்று வருவதாகவே வெளிப்படுகின்றது. இதனூடாக குறித்த பண்பாட்டம்சங்கள் சமூகத்தின் தார்மீக அங்கீகாரத்தைப் பெற்றவையாக அடையாளம் காணப்பட வழியாகின்றது. எனவே இவ்வாறான நிலைமைகளினால் போலி வரலாறுகளும் திரிபுற்ற வரலாறுகளும் இலகுவாக சமூகமயப்படுத்த வழியாகின்றது. இதனை தாப்பர் பின்வருமாறு விளக்குகின்றார்.

> ''வளங்கள் சமமற்ற விநியோகத்தைப் பெற்றிருக்கையில், வரலாற்றுக் காலகட்டங்கள் மற்றும் பலர் விளிம்போரத்தில் அபாயகரமாக வாழவேண்டியிருக்கிறதுÉ சாரம்சமான சுதந்திரங்களும் சட்டப்படியான உரிமைகளும் எச்சரிக்கைக்குள்ளாகின்றன அல்லது ஒதுக்கித் தள்ளப்படுகின்றன. அபிலாஷ‘களுக்கான உரிமைகூட மீறப்படுகின்றது. மிதிக்கப்படுகிறது.
>
> இத்தகைய வேளைகளில் 'பண்பாடு' என்னும் பெயரில் உள்ளது, நுட்பமாக விசாரிக்கப்பட வேண்டியுள்ளது. சமூகத்தைக் கட்டுப்படுத்திட ஒட்டுமொத்தமாகப் பயன்படுத்த வேண்டிய மேலாதிக்க பண்பாட்டை உருவாக்கிட ஆர்வமுள்ளவர்களால், மோசமான வரலாறுகள் தயாரிக்கப்படுகின்ற நேரமும் அதுவே. இத்தகைய கட்டுப்பாடுகள், பண்பாடுகளைப் போராட்ட ஆதாரங்களாகப் பற்றவைக்கின்றன. இப்போராட்டங்கள், கடந்தகாலத்துடன் தொடர்புடைய எடுத்துரைப்பின் அசல் தன்மை மீதானவை. ஆனால் நிகழ்காலத் தேவைகளால் தீர்மானிக்கப்படுபவைÉ அதிகாரத்தின் ஆதாரமும் அடையாளத் தன்மையும் போராட்ட அம்சங்களாயுள்ளன. அப்போது தேசியப் பண்பாடு என்றழைக்கப்பட்டதை உருவாக்கியவற்றுடன் இவை தொடர்பில்லாதவை அல்ல. ஏற்கனவே வாதிட்டுள்ளவாறு, மேலாதிக்கப் பண்பாட்டுக்கான ஒப்புதல் வரவேண்டியுள்ளது, அது அரசிடமிருந்தன்றி குடிமைச் சமூகத்திடமிருந்தே வருகிறது. அப்போதுதான் இத்தகு பண்பாடு, சமூகத்தின் தார்மீக இசைவைப் பெற்றிருப்பதாகக் கூறிக்கொள்ள முடியும். இம்மேலாதிக்க பண்பாட்டைக்

கேள்விக்குள்ளாக்குவது, எதிர்ப்பு வடிவமாக பண்பாட்டின் பாத்திரத்தை ஆரம்பித்து வைக்கிறது (தாப்பர்,2020,பக்.263).''

வரலாற்றில் செல்வாக்குச் செலுத்தும் மேலாதிக்கப் பண்பாட்டையும் அது போலியான வரலாறுகளது கட்டமைவிற்கும், வரலாற்றில் நிலைப்பெற்றுள்ள வரலாற்றுக் காலகட்டங்களது மறைப்பிற்கும் 'பண்பாடு' எனும் அம்சமூடாக எவ்வாறு வழிசமைக்கின்றது என்பதைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

''எனினும் வரலாறும் பண்பாடும் வேறுபடுகின்றன, வேறுபட முடியும். வரலாறு கடந்த காலத்தை எடுத்துரைக்கிறது, விளக்குகிறது. வரலாற்றுச் சான்றின் சான்றிதழ் தேவைப்படாமலேயே, பண்பாடு கடந்த காலத்தை மிகச் சுதந்திரமாக கண்டுபிடிக்கக் கூடியது. வரலாறு சில நேர்வுகளில் செய்வது போல, பண்பாடும் கூட்டு ஞாபகத்தில் இருந்து பெறுகின்றது. ஆனால் வரலாற்றைப் பொறுத்தவரை, நம்பகமானதும் சோதித்தறியப்பட்டதுமான ஆதாரங்களின் பயன்பாட்டின் மூலம், இந்நிகழ்வுப் போக்கு எடுத்துக்காட்டப்பட வேண்டியுள்ளது. பண்பாட்டைப் பொறுத்தவரை, அது இன்னும் ரகசியமானதாக இருக்கக்கூடும். போலியான வரலாறு அதனை அவ்வளவு வலுவானதாக்குகின்றது. இத்தகு வரலாறு, மொகலாயர் காலம் போன்ற பெரிய வரலாற்றுக் காலகட்டங்களைப் பாடநூல்கிலிருந்து அகற்றிவிடலாம் என அனுமானிக்கிறது. அக்காலத்தின் நினைவுச் சின்னங்கள்நிலப்பரப்பை அலங்கரித்தபோதும் - அவை சுற்றுலா மூலம் பெரும் வருவாயைத் தருகிறது பற்றிச் சொல்லவே வேண்டாம். யுத்தகளத் தோல்விகளை வெற்றிகளாக மாற்ற முடியும். கடந்த கால நாயகிகளை வசீகரப்படுத்தும் கவிதாப்பூர்வப் புனைவை வரலாற்று யதார்த்தமாக்கி, தணிக்கையை நியாயப்படுத்தும் மரபாக முடியும். மேலாதிக்கப் பண்பாட்டை உறுதிப்படுத்த முடியும். (தாப்பர்,2020,பக்.263-264).

பேரரசுகளது காலத்தைவிட சிறு ராஜ்யங்களது காலப்பகுதியை நோக்கினால் உள்ளூர் பண்பாடுகளுக்கு முக்கியத்துவம் வழங்கக் காணலாம். 19ஆம் நூற்றாண்டில் மேனாட்டு கருத்துக்களுக்கு பதிலளிக்கும் வகையில் இம்முயற்சி முன்னெடுக்கப்பட்டது. சமஸ்கிருத மரபு மேனாட்டுக் கொள்கையினால் சவாலுக்குள்ளாக்கப்படும்போது, அதுமட்டும் இந்தியமரபன்று என்பதைக் காட்டவும் சமஸ்கிருத மரபை சமஸ்கிருதமல்லாத மரபுகளோடு பொருந்தும் வகையிலும் புதிய பொருள் கொடுக்கப்பட்டது. இந்நடைமுறையின் போக்கில் வெளிப்படும் எதிர்மறையான பொருள் விளக்கங்கள் குறித்து தாப்பர் மிக நுணுக்கமாகப் பின்வருமாறு விளக்குகின்றார்.

''சமஸ்கிருத மரபு மட்டும் முழு இந்திய மரபன்று என்று கூறும்பொழுது,இதைத் தலைக்கீழாக மாற்றி சமஸ்கிருதமற்ற மரபுதான் இந்திய மரபென்று கூறிவிட முடியாது. ஆரிய இனத்தையும், சமஸ்கிருதப் பண்பாட்டையும் உயர்த்திக் கூறுவதற்குப் பதிலாக சமஸ்கிருதமற்ற ஒரு பண்பாட்டையும், ஆரியரல்லாத ஓர் இனத்தையும் உயர்த்திக் கூறவேண்டும் என்பதில்லை. ஏனெனில் இரண்டிலும்

இனம் என்னும் கருத்து மொழியின் அடிப்படையிலேயே பெறப்படுகிறது. பொது மக்கள் பண்பாடு, பிராமணரல்லாதார் பண்பாடு என்ற எதிர்மறைக் கருத்திலிருந்து உருவாக முடியாது'' (2008,பக்.63)

ஏலவே எழுதப்பட்டுள்ள இந்திய வரலாற்றின், வரலாற்று விளக்கப்போக்கு மற்றும் அரசியல் கொள்கைகள் என்பவற்றில் சில அச்சுவார்ப்புக்கள் நிலைத்துள்ளதை அவர் விளக்குகின்றார். அதாவது, தற்கால வரலாற்றாசிரியர்கள் இந்திய வரலாற்றை எழுதும்போது புதிய விஞ்ஞானப் புரட்சி மற்றும் இந்தியத் தேசிய எழுச்சியின் பின்னால் உருவான தேசியக் கொள்கை என்பவற்றின் செல்வாக்கிற்கு உட்பட்டுள்ளனர். 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் முதலாக அரசியலில் மட்டுமன்றி இதர துறைகளிலும் இந்தியத் தேசியவுணர்வு விரவிக் காணப்பட்டது. விதிவிலக்கின்றி வரலாற்றாசிரியர்களும் இக்கொள்கையின் செல்வாக்கிற்கு ஆளாயினர்.

அதன்படி ஒழுங்குபடுத்தப்பட்ட ஆய்வு முறைகளால் கடந்த காலத்தை கட்டியெழுப்ப வேண்டியிருந்ததுடன், தேசியக் கொள்கை அழுத்தம் கொடுக்கும் பொதுப் பண்பாடு, பொதுக் கொள்கை மற்றும் பொது வரலாறு போன்றவற்றின் அடிப்படையில் வரலாற்றாய்வுகளை செய்ய வேண்டியிருந்தது. ஒருபுறம் ஆரம்பத்தில் இந்திய வரலாற்றை தேடிய ஐரோப்பியர் தமது ஏகாதிபத்திய பொருளாதார, நிர்வாக நலன்நாடி தமக்கு சாதகமாக இந்திய வரலாற்றை எடுத்துரைத்தனர். மறுபுறம், தேசிய உணர்வின் அடிப்படையில் வரலாற்றைத் தேடியவர்கள் தமது கொள்கைக்கு ஏற்ற ஆதாரங்களை பழங்காலத்திலிருந்து தேடினர். இவ்வாறு ஆரம்பத்தில் பலரும் பழைமையைத் தேடியதில் பல விளக்கங்கள் கிடைக்கப்பெற்றன. அவை முதலில் கிடைக்கப்பெற்றவை, அறியக்கிடைத்தவை என்பதால் திரும்ப திரும்பக் கூறப்பட்டு முன்கூறியது போல அச்சுவார்ப்புக்கள்போல இந்திய வரலாறு நெடுகிலும் பேசப்பட்டு வரலாயின. அவற்றுள் பல இன்று கேள்விக்குள்ளாக்கப்படும்போது பலரது நம்பிக்கையை தாக்குவதாய் தோற்றம் பெறுகின்றன. பண்பாட்டுத் தேசியம் எனும் கட்டமைவில் இருந்துகொண்டு, காலனித்துவ ஏகாதிபத்தியத்தை விட்டும் தம்மை தனித்துவம்கொண்டு வேறுபடுத்திக்காட்ட எடுக்கப்பட்ட முயற்சிகளுள் பல மக்கள் மத்தியிலும் சமூக நிறுவனங்கள் மத்தியிலும் நிலையான வார்ப்புக்களாகவே நிலைபெற்றுள்ளன. இவற்றை தகர்த்து புதியகண்கொண்டு இந்திய வரலாற்றை நோக்குவதும் கட்டமைப்பதும் வரலாற்றாசிரியர்களுக்கு ஒரு சவாலான காரியமாகும்.

எடுத்துக்காட்டாக, கீழ்த்திசை எதேச்சதிகாரம் என ஐரோப்பாவில் பிரபலமுற்ற கொள்கையின்படி, 'இந்திய சமுதாயம் மாறுதல் அடையாது, அதன் அடிப்படை சாதி அமைப்பு இறுக்கமானது, மாறுதலை அனுமதிக்காதது' (வரலாறும் வக்கிரங்களும்.பக்.11) என்ற கருத்து நிலவுவதைக் குறிப்பிடலாம். அவ்வாறே ஆரியர்-திராவிடர் என்ற பேதக்கட்டமைப்பையும் இங்கு முன்வைக்கலாம். இந்திய சமுதாயம் மாற்றமற்றது எனும் கருத்தை மறுக்கும் வகையிலான சான்றாதாரங்கள் தாராளமாக பண்டைய நூல்களில் கிடைக்கப்பெறுகின்றன. அவ்வாறு ஏற்பட்ட மாற்றங்களுள் சிலதை விரும்பி ஏற்றார்கள், மற்றும் சிலதைக் கண்டித்தார்கள். ஆனால் சமுதாயத்தில்

மாற்றமுண்டு என்பதை அறிந்தே வைத்திருந்தார்கள். ஆகவே, பண்பாட்டுத் தேசியம் எனும் சட்டகத்தினுள் தாம்சார்ந்த கொள்கைகளைப் பேணிக்கொள்ளவும் ஏகாதிபத்தியவாதிகளது நலன்கள் சார்ந்தும் இதுபோன்ற பல முரனான வரலாற்று விளக்கங்கள் சமூகமயப்படுத்தப்பட்டுள்ளன.

அதுபோலவே, ஆரிய இனம் எனும் கருத்துரையும் விளங்குகின்றது. தாப்பர், 'ஆரியர் இனம் என்பது இந்திய மரபிற்கு அந்நியமானது' (பக்.11) என்கிறார். அவர் கருத்துப்படி, ஆரியர் எனும் பதப் பிரயோகமானது பண்டைய இந்திய இலக்கியங்களில் சமூகத்தில் மேல்தட்டு வர்க்கத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டதுடன் ஆரியரல்லாதோரை மிலேச்சர் எனவும் பயன்படுத்தியுள்ளனர். இவ்வாறு சமூக அடிப்படையில் வகைப்பாட்டை அடையாளப்படுத்தியிருப்பது மொழி மற்றும் வருணாசிரம தருமத்தின் அடிப்படையிலேயன்றி இன ரீதியாக அல்ல என்கிறார். இது சார்ந்து பல சான்றுகளை முன்வைக்கும் தாப்பர், பண்டைய நூல்களில் ஆரியரது நாடு என்பதைக் குறிக்கப் பயன்படும் 'ஆரிய வர்த்தம்'(பக்.12) எனும் பதமானது இனம் என்ற பண்பைக் கொண்டு வரையறுக்கப்படவில்லை என்கிறார். அத்தோடு தற்கால ஐரோப்பிய மானிடவியலாளர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒன்றாகவே இனம் விளங்குவதை மேலும் விளக்குகிறார். ஆயினும் பிரித்தானிய காலத்தில் இருந்த மேல்சாதி இந்துக்கள் தம்மை பிரித்தானியருக்குச் சமமானவர்கள், அவர்களும் நம்மைப்போலவே பண்டைய ஆரியக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் என்று தம்மை நிலையில் உயர்த்திக் காட்டிக்கொள்ள உகந்த உத்தியாக ஆரியர் கொள்கையைக்கண்டு பின்பற்றலாயினர்.

இவ்வாறு ஆரியர் என இந்திய வரலாறு பேசும் மக்கள் கூட்டத்தவரை ஓர் இனப்பிரிவினராக அடையாளம் காட்டக்கூடிய சான்றுகள் கிடைக்காது வழக்கொழியும் பட்சத்தில் ஆரியர் சார்ந்து கட்டியெழுப்பப்பட்டுள்ள இந்திய வரலாறுகள் மீள நோக்கப்படவேண்டிய தேவையுடையனவாகின்றன. உதாரணமாக, ஹரப்பா நாகரிகம் ஆரியர் படையெடுப்பால் அழிந்துபோனதாக ஏற்கப்பட்ட கொள்கை சந்தேகத்திற்குள்ளாக்கப்பட்டுள்ளது. அவ்வாறு ஆய்வு செய்யும்போது அந்நாகரிகப் பகுதிகள் வெள்ளப்பெருக்கு போன்ற காரணிகளால் அழிந்து போனமைக்கான சான்றுகளும் கிடைக்கப்பெற்றுள்ளமையானது ஹரப்பா நாகரிகத்தின் வீழ்ச்சி ஆரியர் படையெடுப்பால் ஏற்பட்டது என்ற கருத்தியலை பின்தள்ளியுள்ளது.

எனவே, ரோமிலா தாப்பர் பண்டைக்கால இந்திய வரலாற்று வரைவியலில் மாற்றம் ஏற்பட வேண்டும் எனக்கருதும் கருத்துவார்ப்புக்களுக்கும் அவரது புதிய நோக்கிலான ஆய்வுகளுக்கும் அடிப்படைக் காரணியை இவ்வாறு அடையாளம் காணலாம்,

> ''பழமையில் தஞ்சம் புகுந்து இன்றைய முரண்பாடுகளை மறந்துவிட முடியாது. பழைமையை சரியாக மதிப்பிட்டு அறிவதனால் இன்றைய சமுதாய மாறுதல் செயன்முறை எளிதாக்கப்படலாம். வரலாறு நமது பழமையோடு நம்மை ஒன்றி நிற்கச் செய்ய வேண்டும்.... வரலாறு மக்கள் அனைவராலும், அவர்களது செயல்கள் முழுமையாலும் உருவாக்கப்படுகிறது என்பதை உணர்ந்தால்தான்

> நமது பழமையை ஸ்தூலமான உண்மைப் படிவமாக நமது மனத்தில் உருவாக்க இயலும். வரலாற்று ஆராய்ச்சியின் இறுதியான குறிக்கோள் இதுதானே'' (2008,பக்.64)

**முடிவுரை**

ரோமிலா தாப்பரது 'பாரம்பரிய இந்தியப் பண்பாடுகள்: உடனிகழ்காலக் கடந்த காலங்கள்' எனும் தழிழாக்க நூலில் அவர் பற்றிய அறிமுகப் பகுதியில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

> ''...சர்வதேசப் புகழ்பெற்ற வரலாற்றாளர். வரலாற்றினை இந்தியவியலிலிருந்து சமூக அறிவியல்கள் நோக்கி நகர்த்தியவர். சமூக பண்பாட்டு மானிடவியல், புவியியல், அரசியல் பார்வைகளுடன் வரலாற்றை அணுக வேண்டும் என வற்புறுத்தி வருபவர். தரவுகள், ஆதாரங்கள் முழுமையாகக் கிடைக்கும் பட்சத்தில் தனது முந்தைய நிலைப்பாடுகளை மாற்றிக்கொள்ளத் தயங்காதவர் (2020).''

இந்த அறிமுகக் குறிப்பிலிருந்து தாப்பரது வரலாற்றாய்வுகளது ஆழம் மற்றும் வரலாற்றியல்சார்ந்த அவரது தேர்ச்சி போன்றவற்றை உணர முடிகின்றது. வரலாறு ஏலவே கூறப்பட்டுவரும் கருத்துவார்ப்புக்களை அப்படியே ஏற்று மீள எடுத்துரைப்பதன்று. அவை புதிய துறைகள் சார்ந்து மீள ஆய்வுக்குட்படுத்தப்பட்டு தவறுகள் களையப்படுவது அவசியம். வரலாற்று ஆய்வுகளுக்கு ஒரு தனித் துறை என்று எதுவுமில்லை. மொழியியல் போலவே மேலுள்ள அறிமுகக் குறிப்பில் உள்ளதுபோல பல துறை சார்ந்து வரலாற்றாய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் (Thapar,2002). அதன்போதே அவ்வக்கால அறிவுநிலைக்கேற்ப ஆய்வுமுறைகளில் ஏற்படும் மாற்றங்களை உள்வாங்கி, புதிய அறிவை தொகுத்து, ஏனைய புதிய நோக்குநிலைகளில் இருந்து வரலாற்றாய்வுகளை முன்னெடுக்கவும் வாய்ப்பாக அமையும்.

எனவேதான், இந்திய வரலாற்றில் அதிலும் குறிப்பாக பண்டைக்காலமாக அடையாளம் காணப்படும் வரலாற்றில் கேள்விக்குட்படுத்த முடியாதவாறு சமூக, சமயத் தடைகளைக் கொண்டு காணப்பட்ட கருத்துவார்ப்புக்களை கேள்விக்குள்ளாக்குவதனூடாக இந்திய வரலாற்றியலின் மரபார்ந்த விளக்கங்களை தாப்பர் சலனம்கொள்ளச் செய்தார். அவை நடைமுறையிலுள்ள சமூகங்கக் கட்டமைவுகளையும் அரசியல் நாட்டங்களையும் ஆட்டம்காணச் செய்ய வல்லனவாதலால் அவரது ஆய்வு முடிவுகளும் அவரது இருப்பும் அச்சுறுத்தல்களுக்கு ஆளாக வேண்டியதானது. பிராமணீய ஆதிபத்தியம், ஆரியர்-திராவிடர் என்ற கருத்து நிலை, சமஸ்கிருதப் பண்பாடே இந்தியப் பண்பாடு, இந்திய வரலாற்றுக் காலப்பகுப்பு முறைமைகள் போன்ற பல்வேறுபட்ட ஒருதலைபட்சமான கருத்துவார்ப்புக்களை மறுத்ததில் இவர் சர்ச்சைக்குரிய ஆய்வாளராக அடையாளப்படுத்தப்பட்டார்.

ஆயினும் தாப்பர் தனது புதிய ஆய்வுகளூடாக சமூகமயப்படுத்த முனையும் விடயம் ஒன்றாகும். அதாவது, எழுதப்படும் வரலாறுகள் யாவும் உண்மை வரலாற்றை ஆவணப்படுத்தும் ஒரே நோக்கில் எழுதப்படுவன அல்ல. வரலாற்று ஆய்வுகள் இரண்டு வகையிலானவை. ஒன்று கடந்த காலம் பற்றிய புரிதலைத் தர எழுதப்படுபவை. இவையே ஆவணப்படுத்தப்படுதலுக்குத் தகுதியானவை. காரணம் கடந்த கால எச்சங்கள் பற்றிய அறிவும் அனுபவமும் வருங்காலத்துக்கு வழிகாட்டியாய் அமையும். ஆயினும் இரண்டாம் வகையில் எழுதப்படும் வரலாறுகள் அபாயகரமானவை. அவை இன்னோரன்ன அரசியல் சித்தாந்தங்களின் அடிப்படையில் வரலாற்றியலைத் திட்டமிட்டுப் பயன்படுத்துவதால் எழுதப்படுபவையாகும். இவை இன, மத, மொழி, சாதி, பிராந்தியம் என பல்வேறு சிக்கல்களையும் பேதங்களையும் விரிவுபடுத்தக்கூடியன. தாப்பர் தனது புதிய வரலாற்று ஆய்வுக;டாக இந்திய வரலாற்றியலில் இருந்து களைய முனைவது இரண்டாம் வகையினதாக அடையாளம் காணத்தக்க வரலாறுகளையே ஆகும். அவ்வகையில் ரோமிலா தாப்பர் இந்திய வரலாற்று வரைவியலை புதிய நோக்கில் எடுத்துரைக்கும் ஆய்வாளராகவும் ஏனைய வரலாற்றாய்வாளர்களுக்கு முன்னோடியாகவும் விளங்குகின்றார்.

**உசாத்துணைகள்**

ஞானய்யா, டி. (2014). *இந்தியா: வரலாறும் அரசியலும்*, கோவை:விடியல் பதிப்பகம்.

சண்முகலிங்கம்,கந்தையா., மதுசூதனன்,தெ. (2006). *கருத்தியலும் வரலாறும்*, விழுது- ஆற்றல் மேம்பாட்டு மையம்.

தாப்பர், ரோமிலா. (2020). (மொ.பெ.). சா.தேவதாஸ், *பாரம்பரிய இந்தியப் பண்பாடுகள்: உடனிகழ்காலக் கடந்த காலங்கள்*, எதிர் வெளியீடு.

தாப்பர், ரோமிலா. (2008). (மொ.பெ.). நா.வானமாமலை, *வரலாறும் வக்கிரங்களும்*, சென்னை: அலைகள் வெளியீட்டகம்.

Thapar, Romila. (2002). The penguin History of Early India From the Origins to AD 1300. Penguin Books.

https://www.thehindu.com/books/books-reviews/the-changing-art-of-writing-history/article5546156.ece

https://theindianauthors.in/academic-writers/romila-thapar/

https://www.epw.in/engage/article/romila-thapar-conversation

https://www.business-standard.com/about/who-is-romila-thapar

https://theprint.in/opinion/why-rigsht-wingers-and-lapsed-liberals-hate-romila-thapar-the-mother-of-history-in-india/237900/

https://blogs.loc.gov/kluge/2015/03/who-writes-history/